பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 18 (4—11—71) வியாழன் வெளியீடு: ஐப்பசி 19 (5—11—71) வெள்ளி [இதழ்: 118

மேற்குச் சென்னையில் புதிய குடிநீர்க் குழாய்

மாநில அரசு வழங்கும் நிதியுதவி

சென்னை, நவ. 4—

சென்னை நகரில் -- கீழ்ப்பாக்கம், அயன்புரம், ஷெனாய் நகர், அமைந்தகரை, மேற்கு சென்னையில் ஒரு சில புறப் பகுதிகள் ஆகிய இடங்களில் புதிய குடிநீர்க் குழாய்களைப் பொருத்துவதற்காக, மாநில அரசு, மாநகராட்சிக்கு பாதிக் கடனாகவும் -- பாதி மானியமாகவும் ரூ. 17.28 இலட்சம் அளித்திருக்கிறது.

கட்சி தாவலைக் கண்டிக்க உங்களுக்கு ஏது யோக்கியதை?

சிண்டிகேட் --- சுதந்தராக்களுக்குக் கலைஞர் சூடு

சென்னிமலை, நவ. 4

"மாற்றுக் கட்சியில் நின்று வெற்றி பெற்றவரைச் சொந்தக் கட்சிக்காரர்களாக மாற்றிக்கொள்ளுவதற்கு வழிகாட்டியவர்களே -- சிண்டிகேட்காரர்களும், சுதந்தராக் கட்சியின் ஸ்தாபனத் தலைவரான ஆச்சாரியாரும்தான்" என்பதை, கழகத் தலைவர் கலைஞர் சுட்டிக்காட்டினார்.

"1952-ஆம் ஆண்டிலேயே பதவியைக் காட்டி, கட்சிவிட்டுக் கட்சி மாறுவதற்கு ஊக்கமளித்த ஆச்சாரியாரையும் -- ஆச்சாரியாரைப் பின்பற்றிய காமராசரையும் தலைவர்களாகப் பெற்றுள்ளவர்கள், இன்று அதே காரியத்தை எதிர்த்துக் குரலெழுப்புவதைச் சுட்டிக்காட்டி இடித்துரைத்தார் கலைஞர்; அவர் பேசியதாவது :—

விவசாயிகள் சங்கத்தின் ஆதரவுடன் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவினாசி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பெரியசாமி அவர்கள் தி.மு. கழகத்தில் சேர்ந்துவிட்டார்; அவரைச் சேர்த்து, தமிழகச் சட்டமன்றத்தில் தி. மு. கழகத்தின் எண்ணிக்கை 184-ஆக உயர்ந்துள்ளது.

இது குறித்து, 'வேறு கட்சியைச் சேர்ந்து வெற்றி பெற்ற ஒருவரை உங்களோடு சேர்த்துக் கொள்ளலாமா? -- சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டல்லவா தி.மு. கழகத்துக்கு வந்திருக்க வேண்டும்' என்று சிலர் வாதம் எழுப்பக்கூடும்; இந்த வாதங்களைச் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன்.

கும்பகோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காசிராமன், பழைய காங்கிரசுக் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அவர், பழைய காங்கிரசை விட்டு விலகி இந்திரா காங்கிரசில் சேர்ந்துவிட்டார்; அதனால், அவரை எதிர்த்து என்னென்னவோ கிளர்ச்சி நடத்தி -- 'இராஜினாமா செய்துவிட்டுப் போயிருக்க வேண்டும்' என்று நியாயம் பேசுகிறார்கள்.

பழைய காங்கிரசுக் கட்சியினரை -- சுதந்தராக் கட்சியினரைக் கேட்கிறேன்; சில ஆண்டுகளுக்குமுன் -- அதாவது 1952-ல், தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி குறைந்த பெரும்பான்மை பெற்று -- காங்கிரசுக் கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருக்க யாரும் சம்மதிக்காத நிலையில் -- குற்றாலத்தில் இருந்த இராஜாஜியை அழைத்து 'நீங்கள் முதலமைச்சர் பதவியை ஏற்று எங்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று கேட்டுக்கொள்ள--அதன்படி, இராஜாஜி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அமைச்சரவையில், உடனே இராஜாஜி என்ன செய்தார் தெரியுமா? -- மாணிக்கவேலு நாயக்கரை ஓர் அமைச்சராகச் சேர்த்துக் கொண்டார்; அவர் காங்கிரசுக் கட்சியின் சார்பில் வெற்றி பெற்றவர் அல்லர்; காங்கிரசை எதிர்க்க -- 'காமன்வீல் கட்சி' என்ற பெயரில் போட்டியிட்டு -- காங்கிரசுக் கட்சியைத் தோற்கடித்தவர்.

அதைப்போல், தென்ஆற்காடு மாவட்டத்தில், 'உழைப்பாளர் கட்சி' சார்பில் காங்கிரசுக் கட்சியைத் தோற்கடித்து இராமசாமி படையாச்சி வெற்றி பெற்றார்; அவரையும் காங்கிரசுக் கட்சியில் சேர்த்துக் கொண்டு அமைச்சராக ஆக்கினார்கள்.

இன்று நியாயம் பேசுகின்ற புண்ணியவான்கள், அன்று அந்த நியாயம் எங்கே போயிற்று என்பதற்குப் பதில் சொல்லட்டும்!

வேறு கட்சியின் பெயரால் நின்று வெற்றி பெற்றவரை அமைச்சராகவே ஆக்கிக் கொண்டு -- ஒரு கட்சியையே களீபரம் செய்துவிட்டு இன்னொரு கட்சியை ஏப்பம்விட்டவர்கள்தானே அவர்கள்?

ஆகவே அவர்கள், மற்றவர்களைப் பார்த்துக் குறை கூறுவதற்கு எவ்வித தகுதியும் படைத்தவர்கள் அல்லர்! விவசாயிகள் சங்கம், தமிழ்நாட்டு அளவில் உள்ள கட்சி அல்ல; இன்னும் சொல்லப்போனால், அது, கட்சியே அல்ல -- ஒரு சங்கம்.

விவசாயிகளுக்குத் தேவையான கோரிக்கைகளை அரசிடம் எடுத்துவைத்து, அதை நிறைவேற்றித் தருமாறு வாதாடி வருகின்ற ஓர் அமைப்பு.

விவசாயிகள் சங்கத்தின்

(4-ம் பக்கம் பார்க்க)

சனநாயகக் கடமை என்னவாயிற்று?

பொள்ளாச்சி, நவ. 4—

"இடைத் தேர்தல் என்பது வரக்கூடாது ஒன்று; என்றாலும், ஒரு வேதனையின் விளைவாக ஏற்பட்டுவிட்ட இந்த இடைத் தேர்தல் நாம் எதிர்பாராதவிதமாக வந்துவிட்டது.

"நாட்டில் நடைபெறுகின்ற ஆட்சிபற்றி மதிப்பிட 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஆளும் கட்சி தன் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறி ஓட்டுப் பெறும்.

"ஆனால், ஐந்தாண்டுகளுக்கு இடையில் நாங்கள் செய்துள்ள காரியங்களை மக்களிடம் எடுத்துக் கூறி; மக்களின் அங்கீகார முத்திரை பெறுவதற்கு ஓர் இடைத் தேர்தல் வாய்ப்பாக அமைகிறது.

'இத்தகைய தேர்தல்களில் தங்கள் சனநாயகக் கடமையை நிறைவேற்ற அரசியல் கட்சிகள் முன்வரவேண்டும்.

"தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி ஆட்சியில் இருந்தபோது -- கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, இடைத் தேர்தல் எங்கே நடந்தாலும் தி. மு. கழகம் போட்டியிட்டுத் தனது கடமையை ஆற்றியிருக்கிறது! வெற்றி தோல்விபற்றிக் கவலைப் படாமல் போட்டியிட்டுவந்திருக்கிறது.

'ஆனால் சிண்டிகேட், இந்த சனநாயகக் கடமையை ஏன் ஆற்றவில்லை?"

-- முதல்வர் கலைஞர்
(தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

ஆபிரகாம் லிங்கன் சிலை வேண்டுமா?

அதிக வாக்குகளைப் பெற்றுத்தர முனைவீர்

பொள்ளாச்சித் தொகுதிக் கழகத் தோழர்கட்குக் கலைஞர் அறிவிப்பு

பொள்ளாச்சி, நவ. 4—

அவினாசிபாளையத்தில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் பேசுகையில், 'பொள்ளாச்சித் தேர்தலில் கழகத்துக்கு அதிக வாக்குகள் பெற்றுத் தந்த தொகுதிக்கு ஆப்ரகாம் லிங்கன் உருவச் சிலை பரிசளிக்கப்படும்' என்று அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

'நான் இம்மாதம் 8-ந் தேதி அமெரிக்காவுக்குப் புறப்படுவதாக இருக்கிறேன்; இதுபற்றி 5-ந்தேதி முடிவெடுக்கப்படும்; அப்படிச் செல்வேனானால், அமெரிக்காவில் நான் வெற்றிச் செய்தி கேட்பேன்.

'வெற்றிச் செய்தி அறிவிக்கப்பட்டதும், அமெரிக்காவிலேயே ஆபிரகாம் லிங்கனின் சிறிய உருவச் சிலை ஒன்றை வாங்கி வந்து -- இந்தப் பொள்ளாச்சித் தொகுதியில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளுள் அதிக வாக்குகள் பெற்றுத் தந்த தொகுதிக்கு நானே நேரில் வந்து அந்தச் சிலையைப் பரிசாக வழங்குவேன்.

"ஆறு தொகுதிகளிலும் கழகத் தோழர்களிடையே போட்டி வளர்வது கழகத்துக்கு இலாபம் -- என்ற முறையில், போட்டி வளர வேண்டும் என்று விரும்புகிறேன்."

பெய்தமழையினால் தமிழகம் பெற்ற பயன்

நீர் நிலைகள் நிரம்பின--- நீண்டகாலப் பயிருக்கு நன்மை

குறியளவையும் மிஞ்சுகின்ற வகையில் விளைச்சல் அதிகரிப்பு

சென்னை, நவ. 4—

சிறிது தாமதமாயினும், அண்மையில் பெய்த வடகிழக்குப் பருவமழை, வேளாண்மைத் துறையினருக்கு மிகவும் பயன்படக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது; இதனால் உணவு நிலைமை மேலும் திருப்திகரமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

பல நீர்த் தேக்கங்களிலும் நீர் நிலைமை சீரடைந்திருப்பதாகவும், இது பெரும் அளவில் பயிரிடப்படும் நீண்டகாலப் பயிர்களுக்கு வசதியாக இருப்பதாகவும் வேளாண்மை இயக்குநர் அரிபாஸ்கர் தெரிவித்தார்; இந்தப் பயிர்கள் முழு அளவுக்குப் பயன்தர வேண்டுமென்றால், இதுபோல் மேலும் சிறிதளவு மழைபொழிய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தென்னாற்காட்டின் சில பகுதிகளில் மழை பலமாகப் பெய்யவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தென்னாற்காடு -- திருச்சி மாவட்டங்களின் ஒரு சில பகுதிகள் தவிர, மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் முதல்கட்டப் பயிர் அறுவடை நன்றாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு சுமார் 28 இலட்சம் ஏக்கர் நிலம் மிகு விளைச்சல் தரும் விதைகளால் பயிர் செய்யப்பட்டதாக அவர் கூறினார்; குறியளவு 26 இலட்சம் ஏக்கர்தான் என்றும், இது குறியளவையும் மிஞ்சியது என்றும் கூறினார்.

புதிய ரக விதையான 'ஐ. ஆர். 20' இரண்டு இலட்சம் ஏக்கரில் பயிர்செய்யப்பட்டிருக்கிறது; திருவள்ளூர் வட்டத்தில் மட்டும் 28,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது.

புதிய விதை 'கருணா', மிகுந்த விளைச்சல் தருகிறது; ஏக்கர் ஒன்றில் இரண்டு டன் கிடைக்கிறது; தஞ்சையில் 5 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டதில் 1.40 இலட்சம் ஏக்கரில் 'கருணா'வும், மீதியில் 'ஏ.டி.டி. 27'-ம் பயிரிடப்பட்டிருக்கிறது; 'ஏ.டி.டி 27' ஏக்கர் விளைச்சல் 1.40 டன்னாகும்.

இந்த ஆண்டில், 54 இலட்சம் டன் அரிசி உட்பட 73 இலட்சம் டன் உணவுத் தானியங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும், [illegible]ம் சீரான மழை பெய்வதற்கு வாய்ப்பு இருப்பதனால் இ[illegible]ளவை நிச்சயமாக எட்டிவிடும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அரிபாஸ்கர் தெரிவித்தார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 2002 ஐப்பசி 18 (4—11—71) வியாழன்

வெற்றிக் கனியைக் காணிக்கையாக்குவீர்!

"நன்னம்பிக்கையோடு வெளிநாடு புறப்படுகிறேன்; வெற்றிச் செய்தி அமெரிக்காவுக்கு எட்டச் செய்வீர்" என்று கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், பொள்ளாச்சித் தொகுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கலைஞரின் நம்பிக்கை வீண்போகாது; வெற்றிச் செய்தி அமெரிக்காவரை சென்று கலைஞரை எட்டத்தான் போகிறது -- இதில் ஒன்றும் ஐயமில்லை; ஆனால், 'வெற்றி பெறுவது உறுதி' என்ற எண்ணத்திலேயே கழகத் தொண்டர்கள் மெத்தனமாக இருந்துவிடக் கூடாது.

கலைஞர் உடனிருந்து ஊக்குவித்தால் எப்படிப் பணியாற்றுவோமோ அதைவிடப் பன்மடங்கு ஊக்கத்துடனும் -- உற்சாகத்துடனும் நமது தோழர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டாக வேண்டும்.

நமது தலைவரை அமெரிக்காவுக்கு வழியனுப்பி வைக்கும் அதே வேளையில், 'சென்று வருக -- வென்று தருகிறோம் வெற்றிக் கனியை' என்று சூளுரைத்துவிட்டுத் தேர்தல் களத்தில் முழுமூச்சுடன் இறங்க வேண்டும்.

நமது கழகத் தொண்டர்களிடத்தும், தோழமைக் கட்சித் தோழர்களிடத்தும் கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாகவே, தேர்தல் முடிவதற்கு முன்னரே வெளிநாடு செல்லத் தேதி குறிப்பிட்டிருக்கிறார் -- நமது கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்.

டாக்டர் கலைஞர் அவர்கள், தாம் வெளிநாடு புறப்படும் தறுவாயிலும் தமது கடமையைச் செவ்வனே முடித்துவிட்டுத்தான் செல்கிறார்கள்; வழக்கமாக வாக்குப் பதிவுக்கு இரண்டு நாட்கள் முன்னதாகக் கலைஞர் தொகுதிக்கு வந்து பிரசாரம் செய்வார்; இப்போது தமது வெளிநாட்டுப் பயணத்தை முன்னிட்டு பத்து நாள் முன்னதாகவே தொகுதிக்கு வந்து சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்து தமது கடமையை நிறைவேற்றி வைத்துவிட்டு அமெரிக்கா புறப்படுகிறார்.

கண்ணுக்குத் தெரியும் வெற்றிக் கனியைக் கலைஞர் சுட்டிக் காட்டிவிட்டார்; அதனைப் பறித்து வந்து கலைஞரின் கையில் சேர்க்கும் கடமை தொண்டர்களைத்தான் சாரும்.

எனவே, இன்று முதலே, நமது கழகத் தோழர்கள், தோழமைக் கட்சிகளின் துணையோடு தொகுதி முழுவதிலும் இடைவிடாது -- இரவு பகல் பாராது -- பசிநோக்காது -- கண் துஞ்சாது பணியாற்ற வேண்டும்.

பொள்ளாச்சித் தொகுதி, கழகத்திற்குச் சொந்தத் தொகுதியாகும்; இதை மாற்றாருக்கு மாற்றிவிட, நாமும் இடங்கொடோம் -- வாக்காளப் பெருமக்களும் விரும்பமாட்டார்கள்.

உடுமலை நாராயணன் இருந்த இடத்தில், ஊத்துக்குளி மோகன் ராசுவை அமர்த்தக் கழகம் விரும்புகிறது; இதற்கு அந்தத் தொகுதி வாக்காளர்கள் எதிராக இருக்கமாட்டார்கள் என்பது உறுதி; கழக வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட எந்த அரசியல் கட்சிக்கும் துணிவு பிறக்கவில்லை.

சொந்த வேட்பாளரை நிறுத்த வக்கின்றி, 'சுயேச்சை' என்ற பெயரால் போட்டியிட முனைந்த கிருஷ்ணசாமி கவுண்டருக்கு முட்டுக்கொடுக்க முன்வந்திருக்கிறது தமிழ்நாட்டு சிண்டிகேட்-- அதற்குப் பக்கபலமாக நிற்கிறது சுதந்தரா! இந்த வெட்கக் கேட்டை மறைக்க, ஏதேதோ பிதற்றிக்கொண்டிருக்கிறார்கள்!

வேட்பாளர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட சிண்டிகேட்டும், தொண்டரே இல்லாத சுதந்தராவும், சுயேச்சைக்கு வெண்சாமரம் வீசி -- ஆலவட்டம் பிடிப்பதில் வியப்பில்லைதான்! 'யார் குடியைக் கெடுத்தாவது, தாம் வாழ வேண்டும்' என்று நினைப்பவர்கள், எதையும் செய்யலாம்! பாவம் -- கிருஷ்ணசாமி கவுண்டர் சிக்கியிருக்கிறார் இப்போது!

சிண்டிகேட் பேரைச் சொல்லி ஓட்டுக் கேட்க ஆளே கிடைக்காத இந்த நிலையிலும், 'மக்கள் எங்கள் பக்கம்தான்' என்று சிண்டிகேட்டர்கள் பீததிக்கொள்வதைக் கண்டு சிரிப்புத்தான் வருகிறது!

'சிண்டிகேட்டும் வேண்டாம் -- சுதந்தராவும் வேண்டாம்' என்று எழுபத்தொன்று தேர்தலில் சுத்தமாகத் துடைத்து எறிந்துவிட்ட கோவை மாவட்டத்திலபோய் மீண்டும் வெற்றி பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை அவர்கட்குத் துளிகூடக் கிடையாது; அதனால்தான், அந்த இருகட்சியினரும் சொந்த வேட்பாளரை நிறுத்தவில்லை; 'சுயேச்சையைவிட்டு ஆழம் பார்க்கலாம்' என்பதுதான் அவர்களின் நைப்பாசை! இந்த ஆசையிலும் மண் விழப்போவது உறுதியிலும் உறுதி!

பிற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் எந்த உருவில் வந்தாலும் அடையாளம் கண்டுகொள்ளும் சக்தியை வாக்காளப் பெருமக்கள் நிரம்பப் பெற்றிருக்கிறார்கள்; இனி அவர்களை என்ன சொல்லியும் வசப்படுத்த முடியாது. முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த கழக வேட்பாளர் மோகன் ராசுவுக்கு அமோக வெற்றி கிட்டப்போவது கல்லில் செதுக்கப்பட்ட உண்மையாகும்.

என்றாலும், நமது தோழர்கள் மதப்பாக இருந்துவிடாமல், முன்னிலும் சுறுசுறுப்பாகச் சுழன்று பறந்து உழைக்கவேண்டும்; சுயேச்சையின் பொறுப்புத் தொகை பறிமுதல் ஆகும் அளவுக்குப் பணியாற்ற வேண்டும்.

பிளேக் தடுப்பு ஊசி மருந்து

உலக சுகாதார நிறுவனத்திடம் தமிழ்நாடு அரசு கோரிக்கை

புதுடில்லி, நவ. 4—

"இரண்டு இலட்சம் ஆம்பியூல் பிளேக் தடுப்பு ஊசி மருந்து அவசரமாகத் தேவை" என்று தமிழ்நாடு அரசு உலக சுகாதார நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசின் கோரிக்கை உடனே ஜெனிவாவிலுள்ள நிறுவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

ஓர் இலட்சம் ஆம்பியூல் பிளேக் தடுப்பு மருந்து தமிழ்நாட்டுக்கு விமானத்தில் விரைவில அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிகிறது.

பெங்களூரிலுள்ள மருந்து தயாரிப்பு நிலையம் ஒன்றில் 3,000 ஆம்பியூல் மருந்துதான் கிடைத்தது; இது உடனே தமிழ்நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டது; இந்தியா முழுவதிலும் கிடைக்கும் மருந்து இவ்வளவுதான் என்று தெரிகிறது.

சுகாதார அதிகாரிகளுக்குப் பெரும் பிரச்சினை

தமிழ்நாட்டில் -- திருப்பூர், சேலம், கோவைப் பகுதிகளிலும், கேரளத்தில் கோழிக்கோடிலும் தோன்றியுள்ள பிளேக்நோயைத் தடுப்பதற்குப் போதுமான பிளேக் தடுப்பு மருந்து இல்லாததால் மாநிலங்கள் -- மத்திய சுகாதார அதிகாரிகளுக்கும் பெரும் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

மீண்டும் தயாரிக்க முடிவு

பம்பாயிலுள்ள ஹாப்கின் கழகம் மட்டுமே ஏராளமாக பிளேக் தடுப்பு மருந்து தயாரித்து வந்தது; ஆனால் கடந்த 20 ஆண்டுகளாக இந்நோய் இல்லாததால், இம்மருந்து தயாரிப்பு நிறுத்தி வைக்கப்பட்டது; இப்போது மீண்டும் தயாரிக்கத் தொடங்கியது. சில வாரங்களில் மருந்து கிடைக்கும்.

மத்திய அரசின் நிலை

இந்நிலைமை காரணமாக ஓர் இலட்சம் ஆம்பியூல் பிளேக் தடுப்பு மருந்து அனுப்புமாறு உலக சுகாதார நிறுவனத்திடம் மத்திய அரசு கோரியிருக்கிறது; தமிழ்நாடு கோரியுள்ள 2 இலட்சம் ஆம்பியூல் மருந்துடன் கூடுதலாக ஓர் இலட்சம் ஆம்பியூல் மருந்து கோரப்பட்டிருக்கிறதா என்று தெளிவாகத் தெரியவில்லை.

இலண்டனிலுள்ள லிஸ்டர் கழகம் 15,000 அம்பியூல் மருந்து தருவதாக உறுதி தரப்படுகிறது.

கோட்டையில் ஆலோசனை

பிளேக் தடுப்பு வேலைகள் குறித்து கோட்டையில் நலத்துறை இயக்குநர் செயலாளர் அறையில் ஆலோசனை நடந்தது; இந்தக் கொடிய நோய் தடுப்புக்கான மருந்துகள் -- கருவிகளைத் தருவித்தல் -- அனுப்பிவைப்பது குறித்து ஆராயப்பட்டது.

"கோவை மாவட்டம் திருப்பூர் பகுதிகளில் பிளேக் தடுப்பு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது" என்று நலத்துறைச் செயலாளர் அப்பாசங்கர் அறிவித்தார்.

திருவண்ணாமலையில் கிடைக்கும் இரும்பு

வெட்டியெடுப்பது எளிதாக இருக்கும்

அமைச்சர் மாதவன் தகவல்

சென்னை, நவ. 3—

"வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டாரத்தில் காணப்படும் இரும்பு மற்றி நானும் -- ஜப்பான் நிபுணர்கள் 2 பேரும் சுற்றிப் பார்த்தோம்; சேலம் கஞ்சமலை இரும்பைவிடத் திருவண்ணாமலை இரும்பைத் தோண்டியெடுப்பது சிறிது சுலபமாகவே தோன்றுகிறது.

"திருவண்ணாமலை வட்டாரத்தில் 14 கோடி டன் இரும்பு கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இதுபற்றி மேலும் விரிவாக ஆராய அதிக நிபுணர்கள் கொண்ட ஜப்பான் நிபுணர் குழு விரைவில் வரவிருக்கிறது"

என்று, தமிழகத் தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், நிருபர்களிடம் தெரிவித்தார்.

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வர் என்றாலும், வட சென்னையில் இது அதிகமாகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

அதிகாரிகள் கோரிக்கை

தாமே முன்வந்து தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளும்படியும், கொதிக்கவைத்த நீரையே அருந்துமாறும், சுத்தமில்லாத உணவுப் பொருட்களை உண்ண வேண்டாமென்றும் மக்களை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

காலரா தடுப்பு ஊசி மருந்து போதிய அளவில் இருப்பதாகவும், எந்த நிலைமையையும் சமாளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் மருத்துவமனை அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

ஊனமுற்றோர் உள்ளொளி பெற்றோர் ஆவர்

அவர்கட்கு தன்னம்பிக்கையூட்டுவது அவசியம்

உடலூனமுற்றவர்கள் பள்ளிக் கட்டட விழாவில் ஆளுநர் -- நாவலர் -- பேராசிரியர் உரை

சென்னை, நவ. 4—

அடையாறு செயின்ட் லூயி செவிடர் -- குருடர் கழகத்தின் புதிய கட்டடத்தை ஆளுநர் கே. கே. ஷா திறந்துவைத்தார்.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த மிசேரியோர் நனகொடையைக் கொண்டு ரூ 7 இலட்சம் செலவில் இது கட்டப்பட்டது.

இங்கு 158 செவிட்டுப் பிள்ளைகளும், 61 கண தெரியாப் பிள்ளைகளும் பயில்கிறார்கள்.

சென்ற ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குச் சென்றவர்கள் அத்தனைப் பேரும் தேறியது குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் ஷா

ஆளுநர் கே. கே. ஷா பேசுகையில், உடல் ஊனமுற்றோருக்காகத் திறம்படத் தொண்டாற்றும் இயக்குநரையும் -- மற்றோரையும் பாராட்டினார்.

செவிடர்களுக்கு அச்சு--தையல்--கலைத் தொழிலும், குருடர்கட்கு நெசவு--பிரம்பு பின்னுதல்--இசைக் கலைகள் கற்பிக்கப்படுவதையும் பாராட்டினார்.

நாவலர் நெடுஞ்செழியன்

கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், 25 இலட்சம் ஊனமடைந்த குழந்தைகள் நாட்டில் இருப்பதைக் குறிப்பிட்டு, அவர்கள் பிரச்சினை தீருவதற்கு அரசு மட்டிலும் செயல்படுவது போதாதென்றும தனியார் தொண்டும் அவசியமென்றும் கூறினார்.

பேராசிரியர் அன்பழகன்

மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் சிறப்பு மலரை வெளியிட்டுப் பேசியதாவது:—

"இந்தப் பள்ளியின் புதிய கட்டிடம் எழில் மாடமாகத் திறந்து வைக்கப்பட்ட நேரத்தில் என் மனத்தில் இது அறிவொளியைப் பெருக்குகின்ற ஆலயமாகவே அமைக்கப்பட்டிருப்பதாக எண்ணத் தோன்றியது.

இங்கு பயிலும் மாணவர்களை, 'ஊனமுற்றவர்கள்' என்று சொல்வதைவிட, 'அகவொளி உள்ளவர்கள்' என்று சொல்வதையே விரும்புகிறேன்.

இங்கு பேசிய மாணவர் பெருமிதத்துடன் குறிப்பிட்ட மாதிரி, ஹோமரைப்போல்--அந்தக் கவி வீரராகவனைப் போல்--தாங்களும் மாறலாம் என்கின்ற தன்னம்பிக்கையும் இங்கு பாடமாகப் போதிக்கப்படுகிறது என அறிவதில் மெத்தப் பெருமையடைகிறேன்.

இத்தகைய தன்னம்பிக்கைகளை ஏற்படுத்தும் முயற்சியினால்தான் மனித வாழ்வு சிறப்படைய முடியும்; வெறும் அறிவு மட்டும் மனிதனை—மனிதனின் வாழ்வை மேம்பாடடையச் செய்துவிடாது; தன்னம்பிக்கை இருந்தால்தான் வெற்றிக்கு வழித் துணையாக அமையும்.

அந்தத் தன்னம்பிக்கை இங்கு மாணவர்களுக்கு ஊட்டப் பெறுவது பெருமைக்குரியதாகும்."

மேற்கு ஜெர்மன் கான்சல் டாக்டர் கிளாஸ் ஷ்ராமேயர் தமிழில் வாழ்த்துரையாற்றினார்.

இயக்குநர் மணி மெழுகனல் வரவேற்றார்.

விழாவுக்குப் பின் இப்பள்ளி மாணவர்களால் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

சேலம் இரும்பாலை அமைப்பு தாமதப்படாது

தமிழகத் தொழில் அமைச்சர் செ. மாதவன் உறுதியான நம்பிக்கை

பத்திரிகைச் செய்தி பற்றிக் குறிப்பிட்டு நிருபர்களிடம் விளக்கம்

சென்னை, நவ. 3—

'சேலம் இரும்பாலை நிறுவும் திட்ட வேலைகள் தாமதப்படாது' என்று, தமிழகத் தொழில்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில், 'சேலம் இரும்பாலை அமைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்' என்ற பொருள்படும்படியாக வெளியான செய்தி பற்றிச் செய்தியாளர்கள் வினவியபோதே, அமைச்சர் மாதவன் இவ்விதம் கூறினார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் --- அமைச்சரின் பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"சேலம் இரும்பாலை வருவதில் தாமதம் ஆகலாம் என்றும், அதற்குக் காரணம் சேலம் இரும்பை உருக்க நெய்வேலி நிலக்கரி பயன்படாது என்றும், அதற்கு மாற்று நிலக்கரி பார்க்க வேண்டியிருக்கும் என்றும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருக்கிறதே -- அது உண்மையா ?"

அமைச்சர்:— "சேலம் இரும்பாலை பற்றி டில்லி அரசுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம்; அதிலிருந்து சேலம் இரும்பாலை வருவதில் தாமதம் ஆகாது என்றே நம்புகிறோம். இதில் உள்ள தொழில் நுணுக்கப் பிரச்சினைகள் எல்லாம் பேசி திருப்தியும் ஏற்பட்டுவிட்டது; ஆகவே, சேலம் இரும்பாலைபற்றி மத்திய அரசு நடத்தி வரும் ஆராய்ச்சி வேலைகளையும் துரிதப்படுத்தும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாற்றுக் கரி பற்றி ஆராய்கிறார்கள் என்பது சரியாக இருக்காது; ஏனென்றால், உருக்கிய சேலம் இரும்பிலிருந்து என்னென்ன தனைப் பொருள்களைத் தயாரித்தால், தற்கால மார்க்கெட்டில் கிராக்கியாக இருக்கும் —இலாபமானதாக இருக்கும் என்று ஆராய்ச்சி நடத்தி வருகிறார்களே -- அதில்தான் எது எது என்று மாற்றிமாற்றி ஆராய்ந்து வருகிறார்கள்; மற்றபடி, சேலம் இரும்பை உருக்க நெய்வேலி நிலக்கரி தகுதியானதா இல்லையா -- இல்லை என்றால், மாற்று நிலக்கரியாக வட மாநிலங்களிலிருந்து கொண்டுவர வேண்டுமா -- என்ற ஆராய்ச்சியை அவர்கள் செய்யவில்லை

அப்படியே இதற்கு மாற்று நிலக்கரிதான் பார்க்க வேண்டும் -- வட மாநில நிலக்கரியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்றும் அதற்கு ஆட்சேபனை இல்லை.

'நெய்வேலி நிலக்கரியைத்தான் பயன்படுத்த வேண்டும்' என்று நாம் வற்புறுத்தவில்லை; நிபுணர்களுடைய முடிவுக்கு விட்டுவிடப்பட்டுள்ளது.

ஜப்பானில் உள்ள இரும்புத் தொழிற்சாலைகளுக்கு இரும்பும் நிலக்கரி இரண்டுமே வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்யவேண்டியது இருக்கும் போது, இது ஏன் சாத்தியம் ஆகாது? ஆகவே, இந்த ஆராய்ச்சியை விரைவுபடுத்தும்படி சொல்லியிருக்கிறோம்.

சேலம், கஞ்சமலை வட்டாரத்திலும் இரும்பு ஆலைக்கான நிலம் கையகப்படுத்துவதற்கு அறிவிப்புகள் செய்யப்பட்டுவிட்டன; மத்திய அரசு அதிகாரிகளும் அங்கு பணியாற்றுகிறார்கள்; மத்திய அரசு தகவல் வந்ததும், அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு நிலங்கள் கையகப்படுத்தப்படும்."

நிருபர்:—"சேலம் இரும்பாலைக்கான திட்டச் செலவு அதிகரிக்குமா ?"

அமைச்சர்:— "பொருள்களுக்கு அன்று இருந்த விலையே என்றும் இருக்குமா என்ன -- சிறிது ஏறலாம்."

நாசவேலைக்காரர்களைக் கண்டுபிடிக்க உத்தரவு

புதுடில்லி, நவ. 2—

பாகிஸ்தான் நாசவேலைக்காரர்களைக் கண்டுபிடிப்பதற்குத் தயாராக இருக்கும்படி எல்லைப் பகுதிகளிலுள்ள எல்லா அதிகாரபூர்வமான ஏஜென்சிகளிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

காளானிலிருந்து புரத உணவு

மாமிசத்தைவிடச் சிறந்ததாம்

காளானிலிருந்து புரதச் சத்து பெறும் புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளார் -- பிரிட்டிஷ் நிபுணர் ஒருவர்.

மாமிசத்தைவிட இப்புதிய உணவில் புரதச் சத்து அதிகம் என்பதுடன், சைவ உணவுக்காரர்களின் சங்கடமும் தீர்ந்துவிடும்.

உலகெங்கும் உள்ள சத்துணவுப் பற்றாக்குறையை நீக்க இந்தக் கண்டுபிடிப்பு பெரும் அளவில உதவும்.

"ஆடைகளின் துறையில் செயற்கை இழை எப்படி பெரும் புரட்சி ஏற்படுத்தியிருக்கிறதோ, அதேபோல இந்த புரதச் சத்து உணவும் பெரும அளவில் வரவேற்கப்படும்" என்று அந்நிபுணர் கூறினார்.

உலகெங்கும் சத்துணவு வழங்குவதற்காகக் காளானிலிருந்து புரதம் தயாரிப்பது என்றால் அதற்கு வேண்டிய அளவு காளான் உற்பத்தி வேண்டுமல்லவா? அதற்கும் ஆராய்ச்சி நடைபெறுகிறது; எவ்வளவு வேண்டுமானாலும் காளான் உற்பத்தி செய்யும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் பிரிட்டனில் காளான் உற்பத்தி 10 கோடி டன் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரீட்டில் இருப்புப் பாதை

ஆடாமல்--குலுங்காமல் இரயில் பயணம்

இரயில் வண்டிகள் அதிகம் குலுக்கலும் ஆட்டமும் இல்லாமல், நளினமாக ஓடுவதற்கு காங்கிரீட் இரயில் பாதை போடலாம் என்ற யோசனை கூறப்பட்டுள்ளது; பிரிட்டனில் இதற்கான காங்கிரீட் இரயில் பாதை போட்டுச் சோதனை நடத்துகிறார்கள்.

சரளைக் கற்களைக் கொட்டி—கனமான மரத் துண்டுகளை வழி நெடுகிலும் பதித்து — அதன்மீது தண்டவாளங்களைப் போடும்முறைதான் அநேகமாகப் பல நாடுகளில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது; இதற்கு மாறாக, காங்கிரீட்டால் பாதை அமைத்து -- அதில் தண்டவாளங்களைப் பதிப்பது புதிய முறை.

தண்டவாளங்களுக்கு இருபுறமும் சுமார் இரண்டடி வரை இருக்கும்படி காங்கிரீட் பாதை அமைத்துக் கொள்ளலாம்.

பாதை போட்டவுடனேயே, இரும்புத் தண்டவாளங்களை உறுதியாகப் பிடித்துக்கொள்ளும் பெரிய இரும்பு ஆணிகளையும் அதில் பதித்துவிட வேண்டும்.

அதிக உறுதியுடன் கூடியது; நீடித்து உழைக்கக் கூடியது; பராமரிப்புச் செலவு மிகக் குறைவு; பயணிகளுக்குச் சுகமான பயணம் ஆகியவை இந்த வகைப் பாதையின் நற்பலன்கள்.

பிரிட்டனின் இரயில்வே தொழில் நுட்ப நிலையம் இந்தச் சோதனையை நடத்திவருகிறது; குறிப்பாக நன்கு வளைந்த திருப்பங்களில் இது எப்படி இயங்குகிறது என்பதுசோதனையில் முக்கிய கட்டமாகும்.

தொழுநோயை ஒழிக்க வழி!

உலகிலேயே மிகக் கொடிய நோய் --- மக்கள் அஞ்சி நடுங்கும் நோய் -- தொழுநோய் (குஷ்டம்) ஆகும்.

இதனை ஒழிக்கும் போர், வரலாறு தொடங்கிய காலத்திலேயே தொடங்கியது எனலாம்; ஆயினும், வெற்றி இன்னும் கைகூடிவரவில்லை; மருத்துவப் புள்ளிவிவரங்களே இதற்குச் சான்று.

இன்று உலகிலே இந்த நோயின் கொடுமைக்கு ஒரு கோடி பத்து இலட்சம் பேர் ஆளாகியுள்ளனர்.

நோயின் துவக்கத்திலேயே அதனைக் கண்டுகொண்டு தடுத்திருந்தால், இவ்வளவு பெரிய தொகை இன்று இருந்திருக்காது.

அதுமட்டுமல்ல; பிளாஸ்டிக் அறுவை மருத்துவத்தின் உதவியால் எவ்வளவோ பேருக்கு -- சமுதாயம் வெறுத்து ஒதுக்கி தள்ளிவைத்த இவர்களுக்கு -- சிதைந்து அழிந்த உடல் உறுப்புகளைத் திருத்தி அமைக்க முடிந்திருக்கும்; அவர்களும் சமுதாயத்தில் மீண்டும் இணைந்து வாழ்ந்திருக்க முடியும்.

இவ்வாறு அமெரிக்காவில் அண்மையில் தொழுநோய் ஆராய்ச்சி நடத்திய டாக்டர் வி. கந்தசாமி கூறியிருக்கிறார்; சென்ற ஜூலை மாதம் அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். இப்பொழுது அவர் பொலம்பாக்கத்தில் இருக்கும் ஹெமரிக்ஸ் தொழுநோய் நிலையத்தில் பணியாற்றி வருகிறார்; சென்னையிலிருந்து 60 மைல் தொலைவில் இருக்கிறது பொலம்பாக்கம்.

டாக்டர் கந்தசாமி அளித்த ஒரு பேட்டியில் மேலும் கூறியதாவது:-

"தொழுநோயில் இருவகைகள் உள்ளன; ஒட்டுவாரொட்டியான தொழுநோய் கிருமியுடைய வகை ஒன்று; ஒட்டுவாரொட்டி அல்லாத காசநோய் போன்ற கிருமிகளையுடைய வகை மற்றது; இரண்டாம் வகைதான், உடலுறுப்புகளைச் சிதைத்து அழிக்கிறது.

இந்தியா போன்ற வெப்ப நாடுகளில் இவ்வகை தொழுநோய் காண்கிறது; ஆனால் முன்னால் சொன்னவகைக கிருமிகள்குளிர் நாடுகளில் மிக வேகமாகப் பல்கிப் பெருகுகின்றன; எனவே தொழுநோயின் இருவகைகளும் இப்பகுதிகளில் அநேகமாக சமமான விகிதத்தில்தான் இருக்கின்றன.

தொழுநோய், மனித உடலில் திறந்திருக்கும் பகுதியில்தான் முதலில் ஏற்படுகிறது; என்றாலும் தொழுநோயுற்ற ஒருவரை எவ்வளவு காலமாகத் தொட்டால் நோய் ஒட்டிக்கொள்ளும் என்பதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

பரம்பரை நோய் அல்ல !

தொழுநோய் பரம்பரை நோய் அல்ல! 'தொழுநோய் நகர்ப்புறத்தில் வரும் நோய்' என்ற கருத்தையும் ஏற்பதற்கில்லை!

நோயின் அறிகுறிகள் என்ன? நோயுற்ற ஒருவரின் உடலில் திட்டுத் திட்டாக முதலில் தோன்றும்; அவற்றில் சொரணையிருக்காது; நிறமும் மங்கலாக இருக்கும்; தோலும் வறண்டு இருக்கும்; வியர்வை இருக்காது; வேதனையோ எரிச்சலோ இருக்காதகையால் நோயாளிகள் துவக்கத்திலேயே சிகிச்சைக்கு வருவதில்லை; இதனால் நோய் முற்றிவிடுகிறது -- உறுப்புகள் சிதைந்து அழிவுறுகின்றன!

எனவே, துவக்கத்திலேயே நோய் அறிவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; இதுநோய் முற்றி சிக்கலாகிவிடுவதைத் தடுப்பதுடன், உறுப்புகள் உருக்குலைந்து போவதையும் தவிர்க்கும்.

நோய் பரவாமல் தடுக்க, சற்றுச் சுத்தமாக -- துப்புரவாக இருந்தால் போதும்.

நோய் ஒரு தடவை குணமாகிவிட்டால், நோயாளி, நோய் இருந்த பகுதிகள் பற்றி மிக கவனமாக இருக்கவேண்டும்; இந்தப் பகுதிகள் எதன்மீதும் உராய்தல் கூடாது; மிருதுவாக இருக்க, துணி முதலியவை சுற்றப்பட்ட கருவிகளைத்தான் பயன்படுத்த வேண்டும். இதனால் நோய் மீண்டும் வருவதைத் தடுக்கலாம்."

மண்டபத்தில் பர்மா அகதிகள்

ஆயிரம் பேருக்குத் தங்கும் வசதி

மதுரை, நவ. 3—

பர்மாவிலிருந்து வந்த ஆயிரம் அகதிகளுக்கு மண்டபம் முகாமில் தங்கும் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அகதிகள் அக்டோபர் 20-ந் தேதி வந்து சேர்ந்தனர்.

அகதிக் குடும்பங்களுக்கு அவற்றின் அளவைப் பொறுத்து மாதம் ஒன்றுக்கு ரூ. 30 முதல் ரூ. 75 வரை உதவித் தொகை கொடுக்கப்படும்.

தொழில் நடத்த ரூ. 1,000 கடனுகக் கொடுக்கப்படும்.

பர்மா அகதிகள் ஏழு மாத காலம் இந்த முகாம்களில் தங்கியிருக்கலாம்.

இந்தத் தகவலை இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

பவானியில் அண்ணா பிறந்த நாள் விழா

தந்தை பெரியார் கலந்துகொண்டார்

பவானியில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் 6—10—71-ல் கலைஞர் திடலில் நடைபெற்றது.

பவானி வட்ட தி. மு. க. செயலாளர் இரா. துரை தலைமைவகித்தார்.

தந்தை பெரியார் அவர்கள் அண்ணா நகர் பெயர்ப் பலகையைத் திறந்துவைத்தார்.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு சேலம் மாவட்ட அவைத் தலைவர் எஸ் எஸ். எம். சுப்பிரமணியம், பவானி நகரச் செயலாளர் மு. நாகராசன், வட்டப் பிரதிநிதி ப. சீ. கிருட்டினசாமி, மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் வெங்கிடு, மேட்டுப்பாளையம் ஊராட்சிமன்றத் தலைவர் முத்துசாமி மற்றும் பலர் அண்ணாவின் அரும் பணிகள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

வட்டச் செயலாளர் இரா. துரை நன்றி கூறினார்.

சங்கிலியாண்டபுரம்

திருச்சி -- சங்கிலியாண்டபுரம் எம். ஜி. ஆர். மன்றத்தின் சார்பில் விழா கொண்டாடப்பட்டது: ரெ. துரைராசு தலைமை தாங்கினார்.

திரு. கு. காமாட்சி எம்.எல்.ஏ., வி. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., எம். எஸ். வெங்கடாசலம், கு. ச முருகேசன், ஆர். நாகசுந்தரம், டி. என். வையாளி, கு. இராமசாமி, க. அறிவன், மாணவர்கள் கே. சுந்தர், எம். கே. பழனிவேலு, ஏ. இராசேந்திரன் ஆகியோர் பேசினர்.

மணி—சாமி கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

உறந்தை

திருச்சி 10-வது வட்ட அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் செயலாளர் க. செ. எழிலரசு தலைமையில், 30—9—71 அன்று விழா கொண்டாடப்பட்டது.

கழகக் கொடியைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. கிருட்டினமூர்த்தி ஏற்றிவைத்தார்.

நகரத் தி. மு. க. துணைச்செயலாளர் தா. செவந்திலிங்கம் பேசிய பின் இனிப்பு வழங்கினர்.

இரவு இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுக்கோட்டை--கலீப் நகர்

புதுக்கோட்டை 22-வது வட்டம் உதயசூரியன் படிப்பகத்தின் சார்பில் நகராட்சிமன்றத் துணைத் தலைவர் எஸ். கே. முகம்மது அலி தலைமையில் விழா கொண்டாடப்பட்டது; 1,000 பேருக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

பொருளாளர் ஆர். வெங்கடாசலம், அண்ணா படத்திற்கு மாலை அணிவித்துக் கொடியேற்றி வைத்தார்.

திண்டுக்கல்

26—9—71 அன்று திண்டுக்கல் சோலை ஹால் ரோடில் உள்ள எம். ஜி. ஆர். ரசிகர்கள் தலைமை மன்றத்தின் சார்பில் கா. சிகாமணி தலைமையில் விழா கொண்டாடப்பட்டது.

மதுரை மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் கா. வே. வி. இராசன் கொடியேற்றினார்; திண்டுக்கல் நகரத் தி. மு. க. துணைச் செயலாளர் க. மைக்கேல் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கினார்.

மன்றச் செயலாளர் பி. தியாகராசன் நன்றி நவின்றார்.

அரவக்குறிச்சி

அரவக்குறிச்சி நகரக் கடை வீதியில் 15—9—71-ல், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் சார்பில் விழா கொண்டாடப்பட்டது.

அலங்காரப் பந்தலில் அண்ணா படம் அலங்கரித்து வைக்கப்பட்டது.

அண்ணன் புகழ்பாடும் இசைத் தட்டுகளையும், கலைஞர் புகழ்பாடும் பாட்டுகளையும், கழக இலட்சிய முழக்கங்களையும் இசைத்தட்டு மூலம் ஒலிபரப்பினர்.

விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

விழாவிற்கான ஏற்பாடுகளைத் தமிழ்நாடு முடிதிருத்வோர் முன்னேற்றச் சங்கத் தலைவர் இரா. மா. காந்தியும், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். மன்ற அமைப்பாளர் கருப்பணனும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

சிதம்பரம்

சிதம்பரம் வட்ட நகர தி. மு. கழகங்களின் சார்பில் 15—9—71 அன்று விழா நடைபெற்றது. அனந்தீஸ்வரன் கோவில் தெருவிலிருந்து மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் வாணவேடிக்கைகள் -- பல வகை சிறப்பு நிகழ்ச்சிகளுடன் வண்டித் தொழிலாளர்களின் வண்டி ஊர்வலத்துடனும் சிதம்பரம் நகர சீரணித் தலைவர் பாம. நடேசன் தலைமையில் புறப்பட்டு டவுன் ஹால் வந்தடைந்தது.

வட்ட தி. மு. க. செயலாளர் திரு. தி. ப. மணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சிதம்பரம் வட்ட நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்களும், நகராட்சித் தலைவர் -- ஒன்றியத் தலைவர்கள் -- ஊராட்சித் தலைவர்கள் -- கழக முன்னணியினர் -- தோழமைக் கட்சித் தலைவர்கள் உரைக்குப்பின், சென்னை மாநகராட்சி மேயர் சா. கணேசன் அவர்களும், தமிழக அரசு போக்குவரத்து அமைச்சர் இராமச்சந்திரன் அவர்களும் பேசினர்.

வட்டச் செயலாளர், அமைச்சருக்கும் -- மேயருக்கும் பொன்னாடை போர்த்தினர்.

நகர தி. மு. க. செயலாளர் சு. கோவிந்தராசன் அமைச்சருக்கும் மேயருக்கும் வரவேற்பு இதழ் மடித்தளித்தார்.

கல்லிடைக்குறிச்சி

நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழு கிளை கல்லிடைக்குறிச்சி நூலகத்தில், 15—9—71 அன்று விழா நடைபெற்றது.

எஸ். என். சேக்முகமது அன்பளிப்பாக அளித்த அண்ணா படத்தை எஸ். என். சேக்முகமது திறந்துவைத்தார்கள்.

நூலகர் இனிப்பு வழங்கினர்.

நாகர்கோவில்

குமரி மாவட்டச் சீரணியின் சார்பில் விழா கொண்டாடப்பட்டது.

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலிருந்து சிறப்புப் பயிற்சி பெற்ற 200 தொண்டர்கள் சீருடை அணிந்து நகரை வலம் வந்தனர்.

ஊர்வலத்தை மாவட்டச் சீரணித் தலைவர் கே. ஏ. இராஜப்பா தலைமையில் நகரத் தந்தை திரு. ஜி. கிறித்தோபர் துவக்கிவைத்தார்.

அண்ணாவின் உருவப் படம் அலங்கரிக்கப்பட்ட ஜீப் காரில் இசை முழங்க ஊர்வலத்தில் எடுத்துவரப்பட்டது.

சீரணியின் அணிவகுப்பு மரியாதையை நகரத் தந்தை கிறித்தோபர் ஏற்றுக்கொண்டார்.

ஊர்வலம், நாகர்கோவில் -- வடசேரி சந்திப்பில் பேரறிஞர் அண்ணா சிலையின்முன் அணிவகுத்து மரியாதை செலுத்த -- கே. ஏ. இராஜப்பா ஆள் உயர மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்; நகர சீரணித் தலைவர் எஸ். வேலுமயிலும் அண்ணாவின் உருவச் சிலைக்கு மாலை சூட்டினார்.

பின்னர், ஊர்வலமாகச் சென்ற சீரணித் தொண்டர்கள் காவல் துறையினர் குடியிருப்புப் பகுதியில் துப்புரவுப் பணியை மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சி, மாவட்ட வளர்ச்சி அதிகாரி எஸ். திருப்பதி தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர். இரகுராமன் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

பஞ்சாப் வானவெளியில் பாகிஸ்தான் விமானங்கள் அத்துமீறிப் பறந்தன

எல்லையிலிருந்து முதல் நடவடிக்கை

இந்திய விமானங்களைக் கண்டவுடன் விரைந்து ஓடிவிட்டன

புதுடில்லி, நவ. 4—

எல்லைகளில் இராணுவத்தைக் குவித்து இந்தியாவை அச்சுறுத்திவரும் அதே நேரத்தில், பாகிஸ்தானின் விமானப் படை இப்போது அத்துமீறல்களிலும் ஈடுபட்டிருக்கிறது.

பஞ்சாப் பகுதி வானவெளியில் அத்துமீறிப் பறந்த நான்கு பாகிஸ்தான் ஜெட் விமானங்கள், இந்திய விமானங்கள் விரட்டுவதற்கு முன்னமேயே திரும்பிச் சென்றுவிட்டனவாம்.

பாகிஸ்தான் அண்மையில் மேற்கொண்டிருக்கும் போர் ஆயத்த நடவடிக்கைகளுக்குப்பிறகு, அதன் விமானப் படை இந்தியாவின்மீது பறப்பது இதுவே முதல் தடவையாகுமாம்.

இரண்டு விமானங்கள் வீதம் இரண்டு அணிகளாகப் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வானவெளியில் பறந்து வந்தன; அவைகள் வெகு தூரம் வருவதற்குள் இந்திய விமானப் படை விமானங்கள் நடவடிக்கையில் இறங்கி அவற்றை விரட்டியடித்தன.

டுங்கி கிராமங்களில் ஊடுருவிய பாகிஸ்தான் ஹெலிகாப்டர்மீது எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டனர்; ஆனால் அது தப்பிச் சென்றுவிட்டது.

ஏப்ரல் 5-க்குப் பிறகு இது மூன்றுவது விமான அத்துமீறலாகும்.

பாகிஸ்தான் ஒற்றர்கள் சரணடைந்தனர்

மேற்கு வங்காளத்தில் பேராம்பூருக்கு அருகே அக்டோபர் 30-ம் நாளன்று ஆறு பாகிஸ்தான் ஒற்றர்கள் சரணடைந்தனர்.

பாகிஸ்தான் அடையாளக் குறிகள் கொண்ட கண்ணி வெடிகளும் — லகக் குண்டுகளும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன.

எல்லையைத் தாண்டிச் செல்லக் கூடாது

இந்தியப் படையினருக்கு கண்டிப்பான உத்தரவு

புதுடில்லி, நவ. 1—

"பீரங்கித் தாக்குதல் — ஊடுருவல் செய்தல் போன்ற பாகிஸ்தான் படைகளின் ஆத்திரமூட்டும் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும்போது, எல்லையைத் தாண்டிச் செல்லக்கூடாது" என்று இந்தியப் படையினருக்குக் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

"பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இந்தியப் பகுதிக்கு உட்புறமிருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அத்துமீறல்கள் நீடிக்கின்றன

கடந்த சில நாட்களாக மேற்குக் கிழக்குப் பிரிவுகள் இரண்டிலும் பாகிஸ்தான் அத்துமீறல்கள் நீடிக்கின்றன.

ஜம்மு — காஷ்மீரில் மூன்று பகுதிகளில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாகிஸ்தான் மீறியுள்ளது.

அக்டோபர் 31-ம் நாள் டித்வால் பிரிவில் பதுங்குக் குழிகளைப் பாகிஸ்தான் அமைத்துக்கொண்டிருந்தது.

பூஞ்ச், ரவ்ஷெர் பகுதிகளிலும் இத்தகைய அத்துமீறல்கள் நடந்தன.

இச்சம்பவங்கள்பற்றி ஐ. நா. நோக்கர்களிடம் அரசு ஆட்சேபனை தாக்கல் செய்திருக்கிறது.

நேற்றுக் காலை 11-35 மணிக்கு மேற்கு வங்காளத்தில் கடே,

[illegible] முன்னேற்றக் கழகத்திற்காக [illegible] எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழுதி அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

மத்திய அரசு ரூ. 2 கோடி உதவுகிறது

புவனேஸ்வரம், நவ. 4—

ஒரிசாவில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவுவதற்காக மத்திய அரசு ரூ. 2 கோடி அனுமதித்திருக்கிறது.

ரூ. 50 கோடி உதவுமாறு மத்திய அரசை ஒரிசா அமைச்சரவை கேட்டுக் கொண்டிருக்கிறது.

நிவாரணப் பணிகளுக்காக ஒரிசா அரசு ரூ. 25 இலட்சம் அனுமதித்திருக்கிறது.

புயல் நிவாரணத்துக்காக ரூ. 1 இலட்சம் உதவுவதாகப் பஞ்சாப் அரசு அறிவித்திருக்கிறது.

ஜம்பு பகுதியில் காணப்படும் அவல நிலை

ஒரிசா, நவ. 4—

புயல் — கடல் கொந்தளிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள ஜம்பு பகுதியில், எங்கு பார்த்தாலும் ஒரே பிணமயமாக இருக்கிறதாம்; அவற்றைத் தின்பதற்கும் மோதிய கழுகுகளும் நாய்களும் இருப்பதாகக்கூடத் தோன்றவில்லையாம்.

இடிந்த வீடுகளும் — சாய்ந்த மரங்களும் சீரழிவுக்குச் சாட்சியங்களாகக் காணப்படுகின்றனவாம்.

12 கிராமங்கள் அடங்கிய 30 கிலோ மீட்டர் பகுதியில் வாழ்ந்த மக்களில் 20 சதவிகிதத்தினர்தான் உயிர் தப்பியிருக்கின்றனர்; அவலமிக்க வாழ்வின் சுமைகோடு அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறது.

புயல் விளைவித்த சேதம்

ஒரிசாவில் வேதனைமிக்க நிலைமை

துறைமுகத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூ.1.50 கோடி

கல்கத்தா, நவ. 4—

ஒரிசாவில் அண்மையில் ஏற்பட்ட புயல் சேதம் காரணமாக பெரும் அளவில் நாசம் ஏற்பட்டிருக்கிறது. மணிக்கு 175 கிலோ மீட்டர் வேகத்தில் அடித்த புயலும் — 15 அடி உயரத்தில் எழும்பிய கடல் அலையும் பயங்கரமானதாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

குடிசை வீடுகள் அனைத்தும் பிய்த்து எறியப்பட்டிருக்கின்றன; 100 ஆண்டுக காலமாக வேரோடியிருந்த மரங்களும் சாய்ந்து வீழ்ந்துவிட்டன.

பாரதீப் துறைமுகத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 1 50 கோடி இருக்கும் என்று தெரியவருகிறது. தொலைபேசி — தந்திக்கம்பி பெரும் அளவில் சேதமடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

புயல் காரணமாக மின்சாரத் துறைக்கு ஏற்பட்ட சேதம் மிக அதிகமானதாகும்.

இந்திரா காந்தி—நிக்சன் சந்திப்பு

முக்கியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன

நியூயார்க், நவ. 4—

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இலண்டனிலிருந்து புறப்பட்டு நியூயார்க் போய்ச் சேர்ந்தார்; பெருமழை பெய்து கொண்டிருந்த போதிலும், விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்புமிக்க வரவேற்பு தரப்பட்டது.

தலைமையமைச்சரின் ஆறு நாடுகளின் சுற்றுப்பயணத் திட்டத்தில் இது நான்காவது கட்டமாகும்.

இன்று வாஷிங்டனில், அமெரிக்க அதிபர் நிக்சனைச் சந்தித்து முக்கியப் பேச்சுவார்த்தைகள் நடத்துகிறார்.

இலண்டனில் இந்தியாவின் நிலையை எடுத்துரைத்தார்

இலண்டனில் ஐந்து நாட்கள் தங்கியிருந்தபோது, இந்தியாவின் நிலையை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் வாய்ப்பு எதனையும் அவர் கைவிடவில்லை.

இந்திரா காந்தி இலண்டனுக்கு வருவதற்குமுன் இருந்ததைக் காட்டிலும், இப்போது வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவின் நிலையைப் பிரிட்டன் நன்குணர்ந்துகொண்டிருக்கிறது.

சென்னையில் காலரா நோய் அறிகுறி

மாநகராட்சி தீவிர நடவடிக்கை

தடுப்பு ஊசி குத்திக்கொள்ளுமாறு கோரிக்கை

சென்னை, நவ. 4—

சென்னையில் ஆங்காங்கு காலரா நோய் அறிகுறிகள் தென்பட்டதைத் தொடர்ந்து காலராத் தடுப்பு ஊசிகளைக் குத்தும் நடவடிக்கையில் சென்னை மாநகராட்சி தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

இப்போது காணப்படும் நோய் அச்சம் தரக்கூடிய அளவில் பரவக்கூடியது அல்லவென்றாலும், முன்னெச்சரிக்கையாக எல்லா நடவடிக்கைகளையும் மாநகராட்சி மேற்கொண்டிருக்கிறது.

நாளொன்றுக்குச் சராசரியாக 5,000 பேர் வீதம் இப்போது தடுப்பு ஊசி போட்டுக்கொள்கின்றனர்; இந்தப் பணியைத் தீவிரப்படுத்த 100 சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனர்.

நோய் பரவாமல் தடுப்பதற்குக் குடிநீரில் கலக்கப்படும் குளோரைன் அளவும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

மருத்துவமனையில்..

கடந்த வாரத்தில் சுமார் 140 பேர் காலரா அறிகுறிகளுடன் தண்டையார் பேட்டையிலுள்ள தொத்து நோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்; மூன்று பேர் இறந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

வட சென்னையில் அதிகம்

மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றவர்கள் நகரின் பல பகுதிகளிலிருந்தும் வந்தவர்களா

(2-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைகளை விவசாய சங்கம் எடுத்துக் கூறுவதற்கு முன்னதாகவே, தானாகவே முன்வந்து அவைகளை நிறைவேற்றி வருகிறது கழக அரசு; இந்நிலையில், 'நாங்கள் ஏன் தனியாக இருக்க வேண்டும்— உங்களுடன் வந்துவிடுகிறேன் என்று சழகத்துக்கு வந்துள்ளார் பெரியசாமி; அவரை தி. மு. கழகம் வரவேற்கிறது.

கோவை மாவட்டத்தில் எங்கள் சழகத்திற்கு ஒரு எம்.எல்.ஏ.— சின்னசாமி உண்டு; இப்போது பெரியசாமியும் கிடைத்துள்ளார்."

அரவிந்தர் பெயர் கைவிடப்படுகிறது

மாணவர்கள் கோரிக்கை— புதுவை அரசு முடிவு

புதுவை, நவ. 4—

புதுவையில் புதிதாகத் துவக்கப்படும் பல்கலைக் கழகத்துக்கு அரவிந்தரின் பெயரைச் சூட்டக் கூடாது என்ற மாணவர்களின் கோரிக்கையை புதுவை அரசு ஏற்றுக்கொண்டது; எனவே, மாணவர்கள் தங்களது போராட்டத்தைக் கைவிட்டு விட்டனர்.

முதலமைச்சர் எம். ஓ எச். பாருக் அவர்களுடன் நேற்று மாணவப் பிரதிநிதிகள் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியதற்குப்பின், உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்தை முதலமைச்சர் கூட்டினார். மாணவர்களின் கோரிக்கைகளை அமைச்சரவை ஏற்றுக்கொண்டதுடன், இப்பல்கலைக் கழகத்துக்கு, 'புதுவைப் பல்கலைக் கழகம்' எனப் பெயரிடுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாணவர் கிளர்ச்சி காரணமாக மூடப்பட்டிருக்கும் கல்வி நிலையங்கள் விரைவில் திறக்கப்படும்.

புதிய போலீஸ் படை

மத்திய அரசு அமைக்கிறது

இந்தூர், நவ 4—

நாட்டில் சட்டம் — அமைதியைப் பராமரிக்கும் பொருட்டு புதிய மத்தியப் போலீசுப் படை ஒன்று உருவாக்கப்படும் என்று தெரியவருகிறது.

இது, 'இந்திய ரிசர்வ் படை' என்று அழைக்கப்படும்.

இப்போதுள்ள எல்லைப் பாதுகாப்புப் படையினர் முன்னணியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், ஆகவே, உ. பி. போன்ற மாநிலங்கள் புதிதாக அமைக்கப்படும் போலீசுப் படைக்கு வீரர்களை அளித்து உதவ வேண்டுமென்றும் மத்திய அரசு கேட்டிருப்பதாக மத்தியப் பிரதேச இன்ஸ்பெக்டர்-ஜெனரல் தெரிவித்தார்.

முதலில் இந்தப் படை 15 பட்டாலியன்களாகக் கொண்டதாக இருக்கும் என்றும், பிறகு இது 30 பட்டாலியன் ஆக உயர்த்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இப்படையில் மத்தியப் பிரதேசத்தின் பங்கு 3 பட்டாலியன் ஆக இருக்கும்.

திருமணம்

திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்றக் கட்சி அலுவலக ஊழியரான தோழர் வி. பி. நீலமேகத்துக்கும் — தோழியர் அங்கையற்கண்ணிக்கும் 5—11—71ல் திருவள்ளூர் வட்டம் வெள்ளியூர் கிராமத்தல் திருமணம் நடைபெறும்.

டாக்டர்களுக்கு அரசுக் கடன்

தஞ்சை நவ. 4—

புதிய டாக்டர்கள், தனிப்பட்ட முறையில் சொந்தமாக மருத்துவமனை அமைத்துக் கொண்டு தொழில் செய்வதற்கு உதவும் வகையில் கடனுதவி அளிக்கும் திட்டம் பற்றித் தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்துவருகிறது.

மத்திய அரசின் உதவியுடன் ஏற்பாடு செய்வதற்கு எண்ணியுள்ள இந்தத் திட்டத்தின்படி, புதிய டாக்டர்களுக்கு ரூ. 10,000 முதல் ரூ 15,000 வரை கடனுதவி கிடைக்கலாம்; கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் அவர்கள் சொந்தமாகத் தொழில் நடத்த உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்தகவலைத் தமிழ்நாடு நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

மின்னணு அஞ்சல் முறை

அஞ்சல்களை 'மின் அணு' முறையில் பட்டுவாடா செய்யும் திட்டம் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பரீட்சார்த்தமாக நடைபெறும் இந்தத் திட்டத்தின்கீழ், முதன் முதலில் வாஷிங்டன், நியூயார்க் ஆகிய நகரங்களுக்கிடையே 'மின் அணு' முறையில் அஞ்சல்கள் பட்டுவாடா செய்யப்படுகின்றன.

கடிதங்கள் — வரைபடங்கள் — சட்ட சம்பந்தமான சான்றேடுகள் முதலியவை 'மின் அணு' முறையில், 'ஒளி அஞ்சல்' செய்யப்பட்டு — 4-மணி நேரத்தில் பட்டுவாடா செய்யப்படுகின்றன.